International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தொ. பரமசிவன் ஆய்வுகளில் அரசியல் சிந்தனைகள்

**கு. குமாரி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)

**முனைவர் கோ. குணசேகர்**
இணைப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, விழுப்புரம். 605602

## முன்னுரை

தமிழ்ச் சமூகவியல் மற்றும் மானுடவியல் ஆய்வுப் பரப்பில் பேராசிரியர் தொ. பரமசிவன் (தொ.ப.) அவர்களின் வரவு ஒரு புதிய வரலாற்றுத் திருப்பமாகும். வழக்கமான வரலாற்றெழுத்தியல் என்பது மன்னர்களின் போர் வெற்றிகளையும், ஆதிக்க வர்க்கத்தின் அதிகாரக் கட்டமைப்புகளையுமே முதன்மைப்படுத்தி வந்த சூழலில், அதனை தலைகீழாகப் புரட்டிப்போட்டவர் தொ.ப. வரலாறு மற்றும் பண்பாடு வயல்வெளிகளிலும், சேரிகளிலும், சாமானிய மக்களின் அன்றாட வாழ்வியல் வழக்காறுகளிலும்தான் வேர்கொண்டுள்ளது என்பதைத் தனது ஆய்வுகளின் வழி மெய்ப்பித்தவர். அரசியல் சமூகம், மதம், சாதி, நிலவுடைமை மற்றும் பண்பாட்டு அசைவுகளுக்குள் ஓர் அதிகாரநுட்பமாகப் பின்னிப் பிணைந்துள்ளது என்பதைத் தொ.ப. ஆழமாக வெளிப்படுத்தினார். மார்க்சியத்தின் வர்க்கப் போராட்டக் கோட்பாட்டையும், தந்தை பெரியாரின் சாதி ஒழிப்புச் சுயமரியாதைக் கருத்தியலையும் இயங்கியல் முறையில் இணைத்து, தமிழகச் சூழலுக்கேற்ற சுதேசிய அரசியல் பார்வையை அவர் உருவாக்கினார். பெருந்தெய்வ வழிபாட்டின் பின்னணியில் உள்ள நிலவுடைமை ஆதிக்கத்தையும், அதற்கு எதிரான விளிம்புநிலை மக்களின் நாட்டார் வழிபாட்டு மரபுகளையும் தற்காப்பு அரசியலாக அடையாளப்படுத்திய நுட்பம் தொ.ப.வின் தனித்துவமாகும்.

அதிகாரம் எவ்வாறு பண்பாட்டின் வழியாக அடித்தட்டு மக்களின் மீது செலுத்தப்படுகிறது என்பதையும், அதனை எதிர்கொள்ள உழைக்கும் மக்கள் எத்தகைய வாழ்வியல் எதிர்ப்பரசியலை முன்னெடுத்தனர் என்பதையும் வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

## தொ.ப.வும் அரசியலும்

தொ. பரமசிவன் அவர்கள் பண்பாட்டு ஆய்வை ஓர் அரசியல் கருவியாகப் பயன்படுத்தி, அதிகாரம் எவ்வாறு பண்பாட்டின் வழியாகச் செலுத்தப்படுகிறது என்பதை நுட்பமாக ஆராய்ந்தவர். பண்பாட்டு நிகழ்வுகள், வழிபாட்டு மரபுகள் எளிய மக்களின் மீது எங்கு, எவ்வாறு அதிகாரம் செலுத்துகின்றன என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டினார். தொ.ப. அவர்கள் தந்தை பெரியாரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டவர். பெருந்தெய்வ வழிபாடு, பார்ப்பனியம், இந்துத்துவம் மற்றும் சாதியியம் ஆகியவற்றை எதிர்த்த பெரியாரின்

நிலைப்பாட்டைத் தமிழ்மக்களின் பண்பாட்டுச் சூழலோடு இணைத்துப் புரிந்து கொண்டார். சமயம் மற்றும் பக்தி மரபுகள் எப்படி அரசியல் மயமாக்கப்படுகின்றன என்பதையும், மதவாத சக்திகள் எளியமக்களின் வழிபாட்டு இடங்களுக்குள் எவ்வாறு ஊடுருவுகின்றன என்பதையும் விரிவாக எடுத்துரைத்தார். ஏட்டறிவோடு முடங்காமல் விளிம்புநிலை மற்றும் உழைக்கும் மக்களின் வாழ்வியலை அடிப்படையாக வைத்துத் தனது ஆய்வுகளை முன்னெடுத்தார். கிராமப்புறத் தாய்த்தெய்வ வழிபாடுகளை ஒடுக்குமுறைக்கு எதிரான பண்பாட்டு வேராகவும், அதன் தனித் தன்மையை மீட்டெடுக்கும் அரசியலாகவும் கண்டார். “அரசியலின் வழியாக மட்டுமின்றிப் பண்பாட்டின் வழியாகவும் அதிகாரம் செலுத்தப்பட்டு வருகிறது” என்ற நிலைப் பாட்டை முன்வைத்தார்.

### தொ.ப.வின் அரசியல் கோட்பாடும் பார்வையும்

தொ.ப. அவர்களின் குடும்பப் பின்புலமும், அவர் வாழ்ந்த காலச்சூழலும், தீவிர திராவிட இயக்க வாசிப்பும் அவரை அரசியலை நோக்கி ஈர்த்தன. இவ்வாசிப்பனுபவம் சமூகப் பிரச்சினைகளைக் கூர்மையாக ஆராயும் பார்வையை அவருக்கு வழங்கியது. இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கெடுத்த அவர், பெரியாரைப் பின்தொடரத் தொடங்கிய பின் பண்பாடு, சாதி, மதம் ஆகியவற்றின் ஊடாக அரசியலை ஆராயும் புதிய அணுகு முறையைப் பெற்றார். மேல்தட்டு வர்க்கப் பார்வையில் அல்லாமல், நடுத்தர மற்றும் சாமானிய மக்களின் வாழ்வியல் வழியே அரசியலை அணுகினார். இக்கோட்பாடுகளை ஐந்து நிலைகளில் பகுத்து ஆராயலாம்:

1.அரசியல் நிலைப்பாடு

2.பண்பாட்டு அரசியல்

3.சாதி மற்றும் வர்க்க அரசியல்

4.வரலாறு மற்றும் நிலவியல் அரசியல்

5.மொழி மற்றும் கலை அரசியல்

### 1. அரசியல் நிலைப்பாடு

தொ.ப.வின் அரசியல் நிலைப்பாடு மார்க்சியம் சார்ந்த பெரியாரியத்தை முன்னெடுத்த அரசியலாகத் திகழ்கிறது. அதிகார வர்க்கம் மக்களைப் பிரித்து ஆதாயம் தேடுவதைச் சுட்டிக்காட்டும் அவர், அடித்தட்டு மக்களின் குரலை வெளிக்கொண்டு வருவதே உண்மை யான அரசியல் என்கிறார். நாட்டார்மக்களின் வாழ்வியல் எத்தகைய அரசியலை எதிர் கொள்கிறது என்பதை வெளிப்படுத்துவதே அவரின் இலக்காகும்.

19ஆம் நூற்றாண்டில் காரல்மார்க்ஸ் மற்றும் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் ஆகியோரால் உருவாக்கப்பட்ட மார்க்சியச் சிந்தனை முதலாளித்துவச் சுரண்டலை விமர்சித்து, வர்க்கப் போராட்டத்தின் வழி தொழிலாளர் சமத்துவத்தை இலக்காகக் கொண்டது. மார்க்சியத்தை உள்வாங்கிய தொ.ப., தந்தைபெரியாரின் சாதி ஒழிப்புச் சிந்தனை களையும் ஏற்றுக்கொண்டார். எனவே, மார்க்சியத்தின் வர்க்கப் போராட்டத்தையும் பெரியாரின் சாதியக் கட்டமைப்பு எதிர்ப் பையும் ஒன்றிணைத்துத் தமிழ் மண்ணின் அடித்தட்டு மக்களின் வாழ்வியலோடு பொருத்திக் கண்டார்.

தமிழ்நாட்டு வரலாறு மேல்தட்டு மக்களின் வரலாறாக மட்டுமே கட்டமைக்கப்பட்ட சூழலில், அது சாமானிய மக்களின் பழக்க வழக்கங்கள், வழிபாடுகள் சார்ந்தது என்பதை நிறுவினார். தொழிலாளர் சுரண்டல் என்பது தமிழகச் சூழலில் சாதியச் சுரண்டலாக உருமாற்றம் பெற்றிருப்பதை வெளிப்படுத்தி னார். சாதிய ஒடுக்குமுறையையும் வர்க்கச் சுரண்டலையும் தனித்தனியாகப் பார்க்காமல், இரண்டும் ஒன்றோடொன்று பிணைந்தவை என்ற புரிதலைத் தந்தார்.

கம்யூனிஸ்டுகளுக்கும் பெரியாருக்குமான முரணைப் பற்றிக் குறிப்பிடும் போது: “பண்பாட்டுத் தளத்தில் சாதி ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகப் போராடிய பெரியாரைக் கம்யூனிஸ்டுகள் ஆதரிக்க வில்லை. அவரை பாசிஸ்ட் என்று முத்திரை குத்தினார்கள். பார்ப்பனியத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பெரியாரை எதிர்த்தார் கள். ‘பிராமணத் துவேஷம்’ என்ற சொல்லை கம்யூனிஸ்டுகள்தான் உருவாக்கினார்கள். ”(தொ.பரமசிவன், *தொ. பரமசிவன் நேர் காணல்கள்*, பக். 14)

மார்க்சியம் முதலாளித்துவத்தை எதிர்ப்பதைப் போல, தமிழ்ச் சமூகத்தில் பார்ப்பனியம்

முதலாளித்துவப் பாவனையில் பிற மக்களை அடிமைப்படுத்துவதைப் பெரியார் கடுமையாக எதிர்த்தார். இதனைத் தொ.ப. முழுமையாக ஆதரித்தார். குடியரசு இதழில் வெளிவந்த பெரியாரின் கூற்றை மேற்கோள் காட்டி விளக்குகிறார்:

“கடந்த பல நூற்றாண்டுகளாகவே இந்து சமுதாயம் பிராமணர், பிராமணர் அல்லாதோர், தீண்டப்படாதார் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. நான் கடைசியாக எடுத்துக்காட்டியுள்ள தீண்டப்படாத பிரிவினர் இந்து மதத்திற்குப் புறம்பானவர்கள். அவர்களுக்குக் கல்வி, சொத்து, சமுதாய அந்தஸ்து முதலியவை கிடையாது. அவர்கள் அடிமைகள்.” [தொ. பரமசிவன், *அழகின் அசைவு (தெய்வம் என்பதோர்)*, பக். 301]

“திருவள்ளுவர், திருநாவுக்கரசர், ராமானுஜர் எனத் தமிழ்நாடு புதிய விடுதலைச் சிந்தனையாளர்களைப் பெற்றதுண்டு. ஆனால் சிந்தனையாளராகவும் செயல்வீரராகவும் வாழ்ந்த, தமிழக வரலாற்றில் சமுதாய வீரர் அவர் ஒருவரே பெரியார் ஆவார்.” (தொ. பரமசிவன், *இந்து தேசியம்*, பக். 108)

பொதுவுடைமை அறிக்கையைத் தமிழில் முதன்முதலில் வெளியிட்டவர் பெரியார் என்பதையும், 1944இல் நீதிக்கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றிய வரலாற்றையும் தொ.ப. சுட்டுகிறார். மேலும்: “பார்ப்பன எதிர்ப்புணர்வும் சீர்திருத்த உணர்வும் கொண்ட அறிஞர்களும் செயல்வீரர்களும் இந்தியாவில் பலமுறை தோன்றியுள்ளனர். புத்தர் தொடங்கி பூலே வரை இவர்களது எண்ணிக்கை ஏராளம். அவர்களில் யாரும் பெறாத வெற்றியைப் பெரியார் மட்டுமே பெற்றார். அதுவும் தன் வாழ்க்கையிலேயே பெற்றார்.” (தொ.பரமசிவன், *இந்து தேசியம்*, பக். 113)

**பெரியாரின் அரசியல் ஆளுமையை ஐந்து முக்கியக் கூறுகளாகத் தொ.ப. பட்டியலிடுகிறார்:**

1. கடவுள் மறுப்புச் சிந்தனையோடு பார்ப்பனிய எதிர்ப்பினை முன்வைத்த தனித்துவமான வரலாறு.
2. எதிரிகள் வீழ்த்த முடியாதபடி கறைபடாத கரங்களோடும் தன்னலமற்றும் வாழ்ந்த பண்பு.
3. காந்தியார் உள்ளிட்ட எத்தகைய அதிகார மையங்களையும் கொள்கைக்காக நேருக்கு நேர் எதிர்க்கும் நெஞ்சுரம்.
4. அதிகாரப் பதவிகளை உதறித் தள்ளிய தியாக உணர்வு.
5. களப்போராளியாகத் தொடர்ந்து பார்ப்பன ஆதிக்கச் சக்திகளை எதிர்த்து விழிப்புடன் இயங்கியமை.- [*இந்து தேசியம்*, பக். 113]

திராவிட இயக்கங்கள், பொதுவுடைமை இயக்கங்கள் மற்றும் மக்களின் முற்போக்குச் சிந்தனைகளின் விளைவாகப் பார்ப்பனிய அதிகார மையம் சரிவைச் சந்தித்தது. வர்க்கம் - சாதி உறவு குறித்த மீள்பார்வை உருவானது: “‘வர்க்கம்’ என்ற பிரிவினையை முன்வைத்துச் ‘சாதியம்’ என்ற வாழ் நெறியைப் பொதுவுடைமையாளர்கள் முற்றிலும் புறக்கணித்திருந்த காலம் ஒன்று உண்டு. இன்றோ மார்க்சியவாதிகள் வர்க்கத்திற்கும் சாதிக்கும் உள்ள உறவை ஆராயத்தொடங்கியுள்ளனர். இந்த வகையில் இச்சிந்தனையில் கெயில் ஓம்வெத் எழுதிய *வர்க்கம், சாதி, நிலம்* என்ற நூலுக்கு ஒரு தனியிடம் உண்டு. இந்தப் பின்னணியில் பார்ப்பனர் என்ற மக்கள்தொகையினரையும் பார்ப்பனியம் என்ற கோட்பாட்டையும் இன்று மீள்பார்வை செய்வது அவசியமாகிறது. ”(தொ. பரமசிவன், *இந்து தேசியம்*, பக். 84)

மக்கள்தொகையில் மூன்று சதவீதத்திற்கும் குறைவாக இருந்த ஒரு குழுவின் அதிகார மேலாதிக்கம் வீழ்த்தப்பட்டு, அதிகாரம் சாமானிய மக்களின் கைகளுக்கு நகர்ந்த வரலாற்றுப் போக்கினை இதன்மூலம் வெளிப்படுத்துகிறார். அடித்தட்டு மக்களின் அரசியல் என்பது அவர்களின் பண்பாடு, வழிபாட்டு முறைகளில் பொதிந்துள்ள ஒரு தற்காப்பு மற்றும் எதிர்ப்பு அரசியலாகும். மேல்தட்டுப் பெருந்தெய்வ வழிபாட்டிற்கு மாறாக, தங்களோடு வாழ்ந்து மறைந்த எளிய மனிதர்களை, அநீதியை எதிர்த்து மடிந்தவர்களைத் தெய்வங்களாக வழிபட்டனர். பெண் தெய்வங்கள் பெரும்பாலும் பாலியல் வன்முறைக்கோ கொடூரத்திற்கோ ஆளாகிப் பலியான எளிய பெண்களாக இருப்பதையும், பூசாரிகளாக அடித்தட்டு மக்களே இருப்பதையும் சுட்டுகிறார்:

"பள்ளர், பறையர், சக்கிலியர், நாவிதர், வண்ணார் ஆகிய சாதியாரின் கோயில்களில் பெரும்பாலும் அந்தந்தச் சாதியாரே பூசாரிகளாக இருப்பர்." (தொ. பரமசிவன், *தெய்வங்களும் சமூக மரபுகளும்*, பக்.20) உணவு முறையிலும் இத்தகைய முரண் காணப்படுகிறது. உழைக்கும் மக்களின் கூழ், கஞ்சி மற்றும் இறைச்சி உணவுகளை ஆதிக்க வர்க்கம் 'இழிவானது' எனப் புறந்தள்ளியபோது, அதனை 'உழைப்பின் உணவு' என அடையாளப்படுத்தி வர்க்க அரசியலை நிலைநிறுத்துகிறார்.

**2. பண்பாட்டு அரசியல்**

பண்பாடு என்பது ஓர் அரசியல் ஆயுதம். ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் பண் பாட்டின் வழியே தங்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதையும், அதற்கு எதிரான சாமானியர்களின் எதிர்வினையையும் தொ.ப. அடையாளப்படுத்துகிறார்.

"கனமான நான்கடி நீள உலக்கையைக் கொண்டு கல்லுரலில் குற்றுதல் கடுமையான உடல் உழைப்பிற்குரிய தொழிலாகும். எனவே குத்தும்போது பெண்கள் 'உஸ்' என்ற சத்தத்தை இசை ஒழுங்காகக் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக எழுப்புகின்றனர். சிலபகுதிகளில் 'கம்மேலோ கம் உலக்கை' என்று சொல்கின்றனர். முற்காலத்தில் ஆண்கள் பாடும் படகுப் பாட்டுப் போலப் பெண்கள் உலக்கைப் பாட்டுப் பாடியிருக்கிறார்கள். இதற்கு 'வள்ளைப் பாட்டு' என்று பெயர்." (தொ. பரமசிவன், *பண்பாட்டு அசைவுகள்*, பக்.37)

செருப்பு அணிவது என்பது மனித உரிமை சார்ந்த விடயமாக இருந்தும், இடைக் காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் செருப்பு அணிவது குற்றமாகக் கருதப்பட்டது. எனவே, செருப்பு அணிதல் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் சமத்துவத்திற்கான அரசியல் குறியீடாக மாறியது. *அடையாள அரசியல்:* பிறப்பின் வழியே மக்களைப் பிரிக்கும் பார்ப்பனிய அடையாள அரசியலை விவரிக்கும் தொ.ப. "பார்ப்பனியத்தின் பலமான அம்சங்களை நோக்கி, அவர்கள் தங்கள் சார்பில் பேசப் பார்ப்பனர் அல்லாத அடிமைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது தான் தமிழ்ச் சமூக அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கது." (தொ. பரமசிவன், *இந்து தேசியம்*, பக். 97)

மன்னர்களைத் தங்கள் வசப்படுத்தி அதிகாரத்தைத் தக்கவைத்த வரலாற்று உண்மையை எடுத்துரைக்கிறார்: "அரசன் பணிந்து வணங்கும் அளவுக்கான அதிகாரம் பார்ப்பனர்கள் கையில் இருந்தது என்பது மட்டும் அழுத்தமான வரலாற்று உண்மை யாகும். இந்த அதிகாரத்தைத் தொடர்ந்து சில நூற்றாண்டு காலம் பார்ப்பனர்கள் தக்க வைத்துக் கொண்டிருந்தனர்." (தொ. பரமசிவன், *இந்து தேசியம்*, பக். 90)

**தமிழ்த் தேசியச் சிக்கல்கள்:** பாரதியைப் போன்ற உண்மைத் தமிழ்ப் பற்றாளர்களை அடையாளப்படுத்தும் தொ.ப.: "வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழிலே சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னான் பாரதி. 'தமிழச்சியைத் தவிர வேறு மொழிக்காரர்கள் அழகாக இருந்தால் எனக்குப் பொறுக்க வில்லைடா தம்பி' என எழுதினானே, அவனை விடவா பெரிய தமிழ்த் தேசியவாதி வேண்டும்?" (தொ. பரமசிவன், *மானிட வாசிப்பு*, பக். 81)

அதேவேளையில் தமிழகத்தில் நிகழ்ந்த ஆட்சி மாற்றங்களைச் சுட்டி: "13ஆம் நூற்றாண்டிலிருந்தே ஆட்சி அதிகாரம் தமிழ் பேசாத அந்நிய சாதிக்காரர்கள் கையிலே இருந்தது; இன்றும் தொடர்கிறது." (தொ. பரமசிவன், *மானிட வாசிப்பு*, பக். 79) என்று வரலாற்று முரண்களையும் வெளிப் படுத்துகிறார்.

**சமயம் மற்றும் வழிபாட்டுத் தலங்களின் கட்டமைப்பு:** பக்தி இயக்கக் காலத்தில் பௌத்த, சமண மதங்களை வீழ்த்தவும், சமயங்களை நிலைநிறுத்தவும் அடித்தட்டு மக்களைப் பெருந்தெய்வ வழிபாட்டுடன் இணைத்தனர். அழகர்கோயில் திருவிழாவில் கள்ளர், பள்ளர், இடையர் முதலான பல்வேறு சாதிகளுக்குப் பங்களிப்பு வழங்கப் பட்டதன் பின்னணியில் இத்தகைய சமரச அரசியல் இருப்பதை விளக்குகிறார். பெருங் கோயில்களில் பார்ப்பனர்களும், சிறுதெய்வக் கோயில்களில் பிற சாதியினரும் பூசாரிகளாக இருக்கும் படிநிலை அரசியலையும்

சுட்டுகிறார். *ஆதிதிராவிட முரண்பாட்டு அரசியல்:* தலித் மக்கள் கோயிலுக்குள் நுழையத் தடைகளும், மேலாடை மற்றும் செருப்பு அணியத் தடைகளும் விதிக்கப்பட்ட வரலாற்றை விளக்கும் தொ.ப.:

“சைவ, வைணவர்கள் பக்தி இயக்க எழுச்சிக் காலத்தில் சமண, பௌத்த மதங்களைச் சாய்ப்பதற்காக ஒருவகையான சனநாயகத் தன்மையினைத் தற்காலிகமாகக் கொண்டிருந்தனர். முதலிலே சைவர்களும் வைணவர்களும் தலித்துகளை எப்படிப் பார்த்தார்கள் என்பதில் வேறுபாடுகள் உண்டு. சைவத்தில் நந்தனார் சோதியாகத் தான் சிதம்பரம் கோவிலுக்கு உள்ளே போக முடிந்தது. வைணவத்திலோ திருப்பாணாழ் வாரைத் தோளிலே தூக்கிக்கொண்டு ஒருவர் திருவரங்கம் கோயிலுக்குள்ளே செல்கிறார். இந்த வித்தியாசம் இருக்கிறது.” (தொ. பரமசிவன், *இந்து தேசியம்*, பக். 27) 1949இல் இயற்றப்பட்ட கோயில் நுழைவுச் சட்டம் எளிய மக்களுக்கான உரிமையை மீட்டெடுத்ததை நினைவுகூரும் அவர், தொழில்சார் சாதியக் கட்டமைப்பைப் பின்வருமாறு விமர்சிக்கிறார்:

“பிராமணர்கள் வேதமும் ஓத வேண்டும்; அரசியலும் செய்ய வேண்டும். சமூகத்தில் மிக உயர்ந்த பதவிகளாகிய தலைமை அமைச்சர் பதவியிலோ, குடியரசுத் தலைவர் பதவியிலோ, புகழ்பெற்ற மருத்துவராகவோ, வழக்கறிஞராகவோ இருக்க வேண்டும். பேருந்துப் போக்குவரத்து பெருந்தொழிலாக மாறியபோது பார்ப்பனர்கள் அதற்குள் நுழைந்து முதலாளிகள் ஆனார்கள். பட்டறைத் தொழில் பார்ப்பனர்களின் பரம்பரை தர்மத்துக்கு உடன்பாடா? இதுதான் அவரவர் தருமம் என்பதற்கான உண்மை யான அர்த்தம்.” (தொ.பரமசிவன், *இந்து தேசியம்*, பக். 30)

**நாட்டுப்புற விளிம்புநிலை மக்களின் அரசியல்:** நாட்டார் வழக்காற்றியல் என்பது வேத, வைதீக மரபுகளுக்கு எதிரான கலகக் குரலாகும்: “நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் இன்று தமிழகச் சிந்தனை, கலை, இலக்கியங்களில் ஆழமான மாற்றங் களை ஏற்படுத்தி வருகின்றன. வரலாற்றின் நேர்கோட்டு ரீதியான பார்வையை முற்றிலும் மறுத்து, சுழல்வட்டப் புதிர்களையும் வரலாற்றையும் உருவாக்கி மறுஉற்பத்தி செய்யும் வலிமை உடையது. நாட்டார் வழக்காற்றியல் வைதீக மரபிற்கு எதிரான, ஆணாதிக்க வேத ஆரிய மதத்திற்கு எதிரான தெளிவான சித்தரிப்பு தமிழின் நாட்டார் வழக்காறுகள்.” (தொ. பரமசிவன், *தொ. பரமசிவன் நேர்காணல்கள்*, பக்.9)

**3. சாதி மற்றும் வர்க்க அரசியல்**

சாதி என்பது பிறப்பின் அடிப்படையில் மனிதர்களைப் பிரிக்கும் அகமண முறை யாகும். மானுடவியலாளர் பக்தவத்சலபாரதி, “சாதி என்பது சமுதாய அமைப்பில் இயங்கும் ஒரு தனிப்பட்ட குழுவைக் குறிக்கும். இக்குழுவில் இடம்பெறும் தகுதி பிறப்பால் அமைகிறது. அதனால் ஒரு சாதியில் பிறந்தவர் வேறு சாதிக்கு மாற இயலாது; ஒன்றுக்கு மேற்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்று கூறிக்கொள்ளவும் இயலாது. அவ்வாறே ஒரு சாதியினர் வேற்றுச் சாதியி னரை மணந்து கொள்ளுதலும் இயலாது. எனவே சாதி என்பது அகமண முறையைக் கொண்ட ஓர் அமைப்பாகும்.” (பக்தவத்சல பாரதி, *பண்பாட்டு மானுடவியல்*, பக். 314) என்கிறார். மேலும், மேல்சாதியினர் தங்கள் நலன்களுக்காகத் தூய்மை-தீட்டுக் கோட்பாடு களை வகுத்தனர் என்பதை,

“மேல்சாதியினர் தூய்மை (Purity), தீட்டு (Pollution) ஆகிய கோட்பாடுகளைத் தடுப்புச் சுவர்களாக ஏற்படுத்திக்கொண்டு அதன்மூலம் சமுதாய, பொருளாதார ஆதாயத்தை உறுதியாக நிலைப்படுத்திக் கொள்ள முயன்றதாகும்.” - (பக்தவத்சல பாரதி, *பண்பாட்டு மானுடவியல்*, பக். 314) என்றும், ஜி.எஸ். குர்யேயின் அரசியல் கொள்கையை விளக்கும்போது, “பிராமணர்களே சாதிமுறை யின் தோற்றத்திற்குக் காரணம் என இக்கொள்கை விவரிக்கிறது. இக்கொள்கை யின் மையக்கருத்து வருமாறு: பிராமணர்கள் சமுதாயத்தில் உயர்ந்த தகுதியைப் பெற்று அதன்மூலம் பல்வேறு சலுகைகளை அனுபவிக்கும் பொருட்டு அவர்கள் செய்த சூழ்ச்சியால் சாதிகள் தோன்றின.” - (பக்தவத்சல பாரதி, *பண்பாட்டு மானுடவியல்*, பக். 322) என்றும் சுட்டுகிறார்.

**சாதி அமைப்பு - பொருளாதார நிலைப் பாடுகள்:** சங்க காலத்தில் சாதி என்ற சொல்

இல்லை; குடி, குலம் போன்ற சொற்களே இருந்தன. ஆரிய வருகைக்குப் பின்னரே வர்ண அடுக்குகள் திணிக்கப்பட்டன: "வர்ண தத்துவப்படி பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர்; இதன்படி பார்ப்பதாக இருந்தால் தமிழ்நாட்டின் பார்ப்பனர்களை அடுத்த மேல்சாதியாக வன்னியர்களும் மறவர்களும் இருந்திருக்க வேண்டும். வேளாளர்கள் சூத்திரர்களாக இருந்திருக்க வேண்டும். வேளாளர்கள் தங்களைச் சைவ வேளாளர் கள் என்றனர். இந்த வர்ணக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட சரித்திர இடமும் இதுதான். தங்களைச் சூத்திரர்கள் என்று ஒப்புக் கொள்ளவும் அவர்களால் முடியவில்லை; இந்த வர்ணப் பாகுபாட்டிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளவும் இயலவில்லை." - (தொ.பரமசிவன், *தொ. பரமசிவன் நேர்காணல்கள்*, பக். 62)

வருணக் கோட்பாடு தென்னக நடைமுறை யில் இல்லை; சாதி அடுக்குகளே நிலவின. "துடியன் பாணன் பறையன் கடம்பனென்று இந்நான்கல்லது குடியுமில்லை" (புறநானூறு. 335) என்ற பாடலில் பறையர் குடி குறிப்பிடப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

*சாதி அமைப்புகளின் பொருளாதாரம்:* பறையர் சமுதாயம் ஆற்றிய பல்துறைத் தொழில்களைப் பெரியபுராணத்தின் வழி நிறுவுகிறார்: "பெரியபுராணத்தைக் கூர்ந்து கவனித்தால் நந்தனார் பறையர் என்னும் பிரிவைச் சார்ந்தவர். சேக்கிழாரின் வாக்கின் படி உழவுத்தொழில், தோல் பதனிடுதல், இசைக்கருவிகள் செய்தல், நரம்புகளைச் சரிசெய்தல், மருத்துவப் பணிகள் முதலான பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளை அவர்கள் ஆற்றியுள்ளனர்."-(தொ.பரமசிவன், *தொ.பரமசிவன் நேர்காணல்கள்*, பக்.62) இவ்வாறு சமூகத்திற்கு இன்றியமையாத தொழில்களைச் செய்தவர்கள் அரசு உருவாக்கத்தின் போது திட்டமிட்டு ஒடுக்கப் பட்டனர்:

"அரசு உருவாக்கத்தின் போது அந்தச் சாதி சார்ந்த தொழிலையெல்லாம் சுத்த-அசுத்தக் கோட்பாட்டைக் கொண்டு இழிவாக்கி, அந்தச் சாதியை இழிந்த சாதியாக்கி விட்டனர். தமிழகத்தில் சாதியை இன்றைக்கும் நெல்லை மாவட்டத்தில் 'குடி' என்றுதான் கூறுகின்றனர். ஒரு சாதியைச் சொல்லி, அந்த மக்கள் குடியிருக்கும் பகுதியை 'வெள்ளாளர் குடியிருப்பு' என்றுதான் சொல்கிறார்கள்; சாதி என்ற சொல்லால் அல்ல." - (தொ. பரமசிவன், *தொ.பரமசிவன் நேர்காணல்கள்*, பக். 63)

*வர்க்க முரண்பாடும் சாதி அரசியலும்:* **தொ.ப.,**

"சாதிமுறை என்பது மரபுவழி அதிகாரக் கட்டுமானம்." - (தொ. பரமசிவன், *நீராட்டும் ஆறாட்டும்*, பக்.132) என்று வரையறுக்கிறார். தென்னாட்டுச் சாதி அடுக்குகள் மிகவும் நுட்பமானவை என்பதை, "தெற்காசிய நாடு களில் மரபுவழிச் சமூகங்களில் மனிதனைப் பிறப்பின் வழி பிரித்துப் பார்க்கும் போக்கு நிலைபெற்றுவிட்ட ஒன்று. உலகின் அனைத்து நாடுகளிலும் காணப்படுகின்ற இந்தப் போக்கு, ஒப்பீட்டளவில் இந்தியத் துணைக் கண்டத்தில் மிகுதி. அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவில் தென்னிந்தியச் சாதி அமைப்பு முறை மிக ஆழமானது, மிக நுணுக்கமானதும் கூட. அதனால் ஐரோப்பியக் காலனியவாதிகள் வடநாட்டை விடத் தென்னாட்டின் சாதிகளைப் பற்றியும் சாதி அமைப்பு முறை பற்றியும் அறிய அதிக அக்கறை செலுத்தினர்." - (தொ.பரமசிவன், *நீராட்டும் ஆறாட்டும்*, பக்.131) என்று குறிப்பிடுகிறார். கிராமங்களில் சாதிய ஆதிக்கம் இன்னும் கோர வடிவில் தொடர்வதை, "கிராமத்தின் சமூக அதிகாரம் மேம்போக்காகச் சிதைவது போல் தோன்றினாலும், தன்னுடைய கொடுமையான முகத்தை அது அவ்வப்போது காட்டிக் கொண்டிருக்கிறது. ஒதுக்கப்பட்ட இடங்களி லேயே தலித்மக்கள் ஊராட்சித் தேர்தலில் போட்டியிட முடியாத நிலைதான் சமூக எதார்த்தம். புதிதாகப் பெறப்பட்ட அரசின் பெரிய பதவிகள், நகர்ப்புறத்துக் காலனிகள், ஆடம்பர வாழ்க்கை ஆகிய எதுவும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையிலும் அவர்கள் சந்தித்த சமூக அவமானங்களிலும் பெரிய மாற்றங்களை உண்டாக்கி விட வில்லை." - (தொ.பரமசிவன், *நீராட்டும் ஆறாட்டும்*, பக்.137) என்று பதிவு செய்கிறார். அதேவேளையில் தலித் இலக்கிய எழுச்சியையும் அங்கீகரிக்கிறார்:

"அண்மைக்காலத்தில் தமிழ்நாட்டில் தலித் இயக்கங்கள் எழுச்சி பெற்று வருகின்றன...

இவற்றின் முயற்சியால் அரசியல் இதழ்களும் இலக்கியச் சிற்றிதழ்களும் நிறையவே வெளிவருகின்றன." - (தொ.பரமசிவன், *நீராட்டும் ஆறாட்டும்*, பக்.136) *விளிம்புநிலை நிலவுடைமை அரசியல்:* நிலமற்ற கூலிகளாக உழைக்கும் மக்கள் மாற்றப்பட்ட வரலாற்றை, "வேளாண்மைப் பொருளாதாரம் செழித்திருந்த காலத்தில் பொருளாலும் சாதியாலும் ஒடுக்கப்பட்ட மக்கள் மாதச் சம்பளம் பெற்றதில்லை. அதற்கு முந்திய காலத்தில் நெல், பிற தானியங்கள், பால், கள் போன்ற பொருட்கள் உற்பத்தியோடு தொடர்புடைய மக்கள் தங்களுக்குள் தங்கள் பண்டங்களை மாற்றிக்கொண்டனர்." - (தொ. பரமசிவன், *நீராட்டும் ஆறாட்டும்*, பக்.77-78) என்றும், "சமூக அதிகாரத்தையும் ஆன்மீக அதிகாரத்தையும் கோயில் நிர்வாகத்தையும் கையில் எடுத்துக்கொண்ட பார்ப்பனர்கள் புரோகிதச் சேவை சாதியாரே. அவர்கள் மட்டும் தங்களுடைய வேலைக்காக மன்னரிடம் நிரந்தரக் குடியிருப்பு வசதியினையும் நஞ்சை நிலங்களின் மேலாதிக்க உரிமையினையும் நிரந்தரமாகப் பெற்றுக்கொண்டு விட்டனர்." - (தொ.பரமசிவன், *நீராட்டும் ஆறாட்டும்*, பக். 78) என்றும் 'கூலமும் கூலியும்' கட்டுரையில் எடுத்துரைக்கிறார்.

*உழைப்புச் சுரண்டல் மற்றும் சாதியப் படிநிலை:* ஊதியமற்ற கட்டாய உழைப்பு (வெட்டி வேலை) குறித்து: "கோயில் ஆடுகளையும் மாடுகளையும் பேணி வளர்த்து, கோயில் விளக்குக்கு நெய் அளந்த இடையர்களுக்குச் சேவைக்காகக் கூலியோ மானியமோ கிடையாது. அந்த வேலை 'வெட்டி' வேலையாகும். எனவே கல்வெட்டுகளில் அவர்கள் 'வெட்டுக்குடிகள்' என அழைக்கப்பட்டனர். அவர்களுக்கான ஊதியம் ஆடு, மாடுகளின் இனப்பெருக்கத்தால் கிடைக்கும் கன்றுகளேயாகும். 'வெட்டுக்குடி இடையன்' என்னும் சொற்றொடர் தமிழ்க் கல்வெட்டுகளில் பரவலாகக் காணப்படும்." - (தொ.பரமசிவன், *நீராட்டும் ஆறாட்டும்*, பக். 78) மேலும் சுடுகாட்டுப் பணியாளர்கள், மடப்பள்ளி ஊழியர்களின் உழைப்புச் சுரண்டலையும், வாழ்வாதாரத்திற்குத் தேவையான குறைந்தபட்ச உணவை மட்டும் கூலியாகத் தரும் 'தசைக்கூலி' முறையையும் விளக்குகிறார்:

"ஊரில் எளியகுடிமக்கள் தங்கள் தேவையை நிறைவேற்றிக்கொண்டு கொல்லருக்கும், தச்சருக்கும், அவர்களைப் போன்ற முடி திருத்தும் தொழிலாளி, சலவைத்தொழிலாளி போன்றவர்களுக்கும் உயிர்வாழ்வதற்கு மட்டும் தேவையான குறைந்த அளவு தானியங்களைக் கொடுத்து உதவுவது வழக்கம். இதற்குத் 'தசைக்கூலி' என்று பெயர். அதாவது அடுத்த பருவத்திற்குத் தேவையான உடல் வலிமை அவர்களுக்கு இருக்க வேண்டும் என்பதற்காகத் தரப்படும் குறைந்தபட்சக் கூலி இது. இந்த வழக்கம் காலனி ஆட்சி நடைபெற்ற போது கூட உயிரோடு இருந்தது." - (தொ. பரமசிவன், *நீராட்டும் ஆறாட்டும்*, பக். 79)

**4. வரலாறு மற்றும் நிலவியல் அரசியல்**

வரலாறு மன்னர்களின் வெற்றிகளைப் பதிவு செய்வதன்று உழைக்கும் மக்களின் சமூக வரலாறு ஆகும். ஆதிக்க மையங்களின் அரசியலை உடைக்க எளிய மக்களின் பண்பாட்டு வரலாற்றை ஆவணப்படுத்த வேண்டும் என்பதே தொ.ப.வின் வழிமுறை யாகும். இலக்கியம், கல்வெட்டுகளுடன் வாய்மொழி வழக்காறுகளையும் இணைத்து வரலாற்றை மீளுருவாக்கம் செய்தார்.

**நிலவியலும் அதிகாரப் பகிர்வும்:** தொல்காப்பியத்தின் ஐந்திணை நிலப்பாகுபாட்டை உழைக்கும் மக்களின் அதிகாரப் பகிர்வோடு இணைத்து ஆராய்ந்தார். அழகர்கோயில் வழிபாட்டில் அதைச் சுற்றியுள்ள கள்ளர், பள்ளர், இடையர், வலையர் ஆகியோரின் வர்ணிப்புப் பாடல்களைத் தரவுகளாகக் கொண்டு அதிகாரப் பரவலை நிறுவினார்.

**ஊர்ப்பெயர் ஆய்வு:** பாளையங்கோட்டை குறித்த வரலாற்று நூலில், "பாளையங்கோட்டை ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கோட்டை நகரம். நகரில் உள்ள பழமையான கோயில்கள் கோபாலசுவாமி கோயிலும், திரிபுராந்தகேஸ்வரர் கோயிலும் ஆகும். இவ்விடம் ஆகமவழி கற்கோயில்." - (தொ. பரமசிவன், *பாளையங்கோட்டை ஒரு மூதாரின் வரலாறு*, பக்.13) முதலாம் இராஜராஜன் காலக் கல்வெட்டுகளில் இந்நகரம் 'ஸ்ரீவல்லப மங்கலம்' என்றும், விண்ணகரம் 'வீரநாராயண விண்ணகரம்' என்றும் குறிப்பிடப்படுவதைச் சுட்டிக்

காட்டுகிறார்.

### 5. மொழி, இலக்கியம் மற்றும் கலை அரசியல்

தமிழ் மொழியின் தொன்மையை விளக்கும் தொ.ப., சைவஇலக்கியங்களில் அகத்தியருக் குச் சிவன் தமிழ் கற்பித்ததாகக் கூறப் படுவதைக் குறிப்பிடுகிறார்: “தாழ்புனை சுடர்க்கடவுள் தந்த தமிழ்” (தொ.பரமசிவன், *அழகின் அசைவு*, பக்.12)

*மொழியியல் நோக்கில் அரசியல் பரிமாணம்:* “தமிழ் என்ற சொல் இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்ற பொருள்களிலும் வழங்கப்பட்டுள்ளது” (*அழகின் அசைவு*, பக். 11). வடமொழி ஆதிக்கத்தை எதிர்த்துத் தோன்றிய திராவிட இயக்கம் மொழியை ஓர் அரசியல் கருவியாக முன்னெடுத்தது. அறிஞர் அண்ணா, பெரியார் ஆகியோர் முன்னெடுத்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆட்சி மாற்றத்திற்கு வித்திட்டதை மொழியரசியலாக விளக்குகிறார்.

**செவ்வியல் இலக்கியம்:** செவ்வியல் இலக்கியங்கள் 41 நூல்களாகப் பகுக்கப் பட்டுள்ளன (தொல்காப்பியம், இறையனார் களவியல் உரை, எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு 18, சிலப் பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளா யிரம்). சிலப்பதிகாரம் குறித்த அவரது பார்வை தனித்துவமானது:

“சிலப்பதிகாரம் போன்ற செவ்வியல் இலக்கியங்கள் காலவெள்ளத்தை எதிர்த்து நின்று பல்வேறு வகையான வாசிப்புகளுக்கு இடந்தருவன. எனவேதான் அவை உயிர் வாழுகின்றன. பாரதியின் சிலப்பதிகார வாசிப்பு வேறு; ம.பொ.சி.யின் சிலப்பதிகார வாசிப்பு வேறு. என்னுடைய மாணவர் சூரியன் நோக்கில் சிலப்பதிகாரத்தை வாசித்துக் கட்டுரை எழுதியுள்ளார். இன்று தஞ்சை மாவட்டத்தில் வறண்டு கிடக்கும் காவிரியை நினைத்துக் கொண்டு சிலப்பதி காரத்தின் கானல்வரியைப் படித்தால் எந்தத் தமிழனுக்கும் நெஞ்சடைத்துப் போகும். அதற்கான காரணம் சிலப்பதிகாரம் ஒரு செவ்வியல் இலக்கியம் என்பது தான்.” (தொ.பரமசிவன், *தொ. பரமசிவன் நேர்காணல்கள்*, பக். 112)

**நீதிமன்ற விசாரணையின்றி வீதியிலேயே கோவலன் கொல்லப்பட்டதை அரசு பயங்கர வாதமாகச் சாடுகிறார்:** “இளங்கோவடிகள் தன் காவியத்தில் ‘கொலைக்களக்காதை’ என்னும் தலைப்பில் கொடுத்திருந்தாலும் கோவலன் கொலைக்களத்துக்கு இட்டுச் செல்லப்படவில்லை. அங்கு அழைத்துச் சென்றிருந்தாலாவது அவனுக்குத் தன் கட்சியைச் சொல்ல ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கும். அவன் வீதியிலேயே கொல்லப்பட்டான். குறுக்காக வெட்டப்பட்ட அவன் சடலத்தைக் கண்ணகி வீதியில்தான் கண்டெடுத்தாள். எல்லா மனித உரிமை களும் மீறப்பட்டன. இதைவிடத் துல்லியமாக அரசுப் பயங்கரவாதத்தை எந்தக் காவியமும் கூறவில்லை.” (தொ. பரமசிவன், *தொ. பரமசிவன் நேர்காணல்கள்*, பக்.112)

**பெண்ணின் கற்பு ஒழுக்கம் இயற்கையோடு தொடர்புடையதாகக் கட்டமைக்கப்பட்ட சமூக அரசியலையும் சங்க இலக்கியப் பாடலின் வழி ஆராய்கிறார்:** “வள்ளி கீழ்வீழா வரைமிசைத் தேன்தொடா கொல்லை குரல்வாங்கி யீனா” (கலித்தொகை. 39) (தொ. பரமசிவன், *நீராட்டும் ஆறாட்டும்*, பக். 80)

*பக்தி இலக்கியமும் மக்களின் அரசியலும்:* சமண, பௌத்த மதங்களுக்கு எதிரான கலகமாகத் தோன்றிய பக்தி இயக்கம், பிற்காலத்தில் மன்னர்களையும் பெருங் கோயில்களையும் மையமாகக் கொண்ட நிலவுடைமை ஆதிக்கமாக மாறியது: “தமிழக வரலாற்றில் நிறுவனமயப்பட்ட முதல் இயக்க மாகப் பக்தி இயக்கத்தையே குறிப்பிடலாம். பக்தி இயக்கம் என்பது சமண, பௌத்த மதங்களுக்கு எதிராகப் பிறந்த ஒரு கலக இயக்கமாகும்.” (தொ. பரமசிவன், *சமயங் களின் அரசியல்*, பக். 8)

“இப்போதுள்ள தொழிற்படிப்பின் மீதான போலி கவர்ச்சி பொதுநல உணர்வோடு பிறந்ததல்ல. உள்நாட்டுத் தொழில்நுட்பத் தோடு இந்தக் கல்விமுறை மாற்றம் பெறும் வரை இது எளிய மக்களுக்குப் பயன்படாது. இருப்பினும் பார்ப்பனர்களுக்கு மாற்றாக இந்தத் துறைகளில் பார்ப்பனர் அல்லாதோர் நுழைகிறார்கள் என்பதில் மட்டுமே நாம் நிறைவு கொள்ளலாம்.” (தொ. பரமசிவன், *பார்ப்பனியமும் இந்திய தேசிய உருவாக்க மும்*, பக். 44) என்று கல்வி சமத்துவத்தை

நோக்கிய பாதையாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

### தொ. ப. முன்வைக்கும் அரசியல்

தொ. ப. முன்வைக்கும் அரசியல் என்பது மார்க்சிய, பெரியாரியப் பார்வைகளின் வழியே அடித்தட்டு, விளிம்புநிலை மக்களின் சமூக, பொருளாதார விடுதலையை முன்னிறுத்தும் அரசியலாகும். நாட்டார் மக்களின் வாழ்வியல், வழிபாட்டு முறைகள் குறித்த புரிதல் பரவலாக வேண்டும் என்றும், சாதியப் படிநிலைகளை அகற்றி உண்மை யான சமத்துவம் நிலைபெற வேண்டும் என்றும் கூறுகிறார். தொழில்நுட்ப அடிமைத் தனத்தை எச்சரிக்கும் அவர்: “ஒரு காலத்தில் வேதங்கள், சாத்திரங்கள் நம்மை அடிமைப்படுத்தியது போல, இப்போது வீடியோ நம்மை அடிமைப்படுத்தி இருக்கிறது.” - (தொ. பரமசிவன், *தொ. பரமசிவன் நேர்காணல்கள்*, பக்.88) என்று கூறி, மக்கள் விழிப்புணர்வோடு சிந்தித்துப் புத்தக வாசிப்பின் வழியே சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாட்ட வேண்டும் என நிறைவு செய்கிறார்.

### முடிவுரை

இந்திய அரசியலில் தமிழ்நாடு கொண்டுள்ள தனித்துவமான திராவிட இயக்க மரபையும், அதில் தொ.ப. அவர்களின் மார்க்சிய - பெரியாரியப் பார்வையின் பங்களிப்பையும் கட்டுரை நிறுவுகிறது. அவரது அரசியல் சிந்தனைகள் ஐந்து முதன்மைப் பிரிவு களாகப் பகுக்கப்பட்டு, சாதிய-வர்க்க முரண் கள், நிலவுடைமைச் சுரண்டல், அதிகாரத் தின் இடப்பெயர்ச்சி, அடித்தட்டு மக்களின் எதிர்ப்பு அரசியல், சிலப்பதிகாரத்தின் வழியான அரசுப் பயங்கரவாத விமர்சனம், பக்தி இயக்கத்தின் நிறுவனமயமாதல் மற்றும் உலகமயமாதலின் பண்பாட்டுத் தாக்குதல்கள் ஆகியவை ஆதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. அரசியல் மேல்தட்டு வர்க்கத்தின் கருவியாக இல்லாமல், எளிய விளிம்புநிலை மக்களின் உண்மையான விடுதலையையும் சமத்துவத் தையும் உறுதிசெய்யும் வாழ்வியல் நெறியாக மாற வேண்டும் என்பதே தொ.பரமசிவன் முன்வைக்கும் அரசியல் கோட்பாடாகும்.

### துணைநூற்பட்டியல்

1. தொ. பரமசிவன், *அழகர் கோயில்*, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1989.
2. தொ. பரமசிவன், *அறியப்படாத தமிழகம்*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2001.
3. தொ. பரமசிவன், *பண்பாட்டு அசைவு கள்*, காலச்சுவடு பதிப்பகம், நாகர் கோவில், 2001.
4. தொ. பரமசிவன், *இந்து தேசியம்*, பாரதி புத்தகாலயம், சென்னை, 2004.
5. தொ. பரமசிவன், *நீராட்டும் ஆறாட்டும்*, தாதா பப்ளிகேஷன்ஸ், பாளையங் கோட்டை, 2007.
6. தொ. பரமசிவன், *தெய்வங்களும் சமூக மரபுகளும்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2010.
7. தொ. பரமசிவன், *தொ. பரமசிவன் நேர்காணல்கள்* (தொகுப்பு: பா. பிரபாகரன்), காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2011.
8. தொ. பரமசிவன், *சமயங்களின் அரசியல்*, பாரதி புத்தகாலயம், சென்னை, 2012.
9. தொ. பரமசிவன், *பார்ப்பனியமும் இந்திய தேசிய உருவாக்கமும்*, தாதா பப்ளிகேஷன்ஸ், பாளையங்கோட்டை, 2013.
10. தொ. பரமசிவன், *பாளையங்கோட்டை ஒரு மூதூரின் வரலாறு*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2015.
11. தொ. பரமசிவன், *மானிட வாசிப்பு*, புதுமைப்பித்தன் பதிப்பகம், திருநெல்வேலி, 2016.
12. பக்தவத்சல பாரதி, *பண்பாட்டு மானுட வியல்*, மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 2003.
13. சுப்பிரமணியன், ச.வே. (பதி.ஆ.), *பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2006.
14. வேங்கடசாமி நாட்டார், ந.மு. (உ.ஆ.), *சிலப்பதிகாரம்*, திருநெல்வேலி தென்னிந் திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1968.